ஆசீர்வாதமும் அர்ப்பணமும்

சகோ.அகஸ்டின் ஜெபக்குமார்

நாம் மாத்திரமல்ல, வாழும் தேசத்தையும் எழுப்புதல் ஆளவேண்டும் என்ற ஆதங்கமுடையோரால் மாத்திரமே எழுப்புதல் பற்றியெரியமுடியும். பொய்யாய் எரியும் சத்துருவின் தீயில் வெந்தழியும் மானிட வர்க்கத்தினரை மீட்க பக்தியிருந்தும், எழுப்புதல் எனும் நெருப்பை பற்றவைக்க பெலனில்லாமல் பலர் தவிக்கும் நேரத்தில், பரமன் அதற்காய் செலுத்திய விலையறிந்தோர், பரிசுத்தத்திற்காய் தங்களையும் பணையம் வைத்து பாரதத்தையும் அவருக்காய் கொள்ளையிட தயங்குவாரோ. ஒளி பெற்றும் ஒளிராத தீபங்களாய், உப்பென்றும் மற்றாருக்கு சுவையூட்டாதோராய் வாழும் மனிதர்களால் பரம ராஜ்யத்தின் மாந்தர் தொகையைப் பெருக்குவதெப்படி? அழியும் ஆத்துமாக்களுக்கிடையே, தன் ஆத்துமா தப்பினால் போதும் என்ற வாழ்வு, நம்மை பரலோகம் சேர்க்கலாம், ஆனால், பரலோகப் பசியைத் தீர்க்காது. எதிரியின் தகிக்கும் தீயைக் கண்டு தங்களின் வேகத்தைத் தணித்துக்கொண்டோரும், தயங்கி நிற்போரும், ஆத்தும தாகத்தை அடக்கிக்கொண்டோரும் அவரின் ஆத்தும வருத்தத்தைத் திருப்தி செய்வாரோ! தன் குமாரனால் தேவனே எழுப்புதலுக்கு இட்ட அஸ்திபாரத்தின்மீது கட்டுவதற்கு நமது கைகள் இணையட்டும். பரிசுத்தம் எனும் நெருப்பும், மாற்றங்களில் மாறா மனநிலையுமே உலகைக் கலக்கும் எழுப்புதலுக்கு வித்திடும் என்ற உண்மை நமது உள்ளங்களில் உறையட்டும்.

தேவனின் சந்திப்பில் எழுப்புதல்

> அவன் பெனியேலைக் கடந்துபோகையில், சூரியன் உதயமாயிற்று. அவன் தொடைச்சுளுக்கினாலே நொண்டி நொண்டி நடந்தான். ஆதியாகமம் 32:31

பெனியேலில் யாக்கோபு தேவனைச் சந்தித்தபோது, அவனுக்குள் பலத்த மாற்றங்கள் நிகழத்தொடங்கியது, ஆனால் அது ஆரம்பம் மாத்திரமே. பெனியேலில் தேவன் யாக்கோபைச் சந்திக்கும் முன்னர் யாக்கோபு பயம் நிறைந்தவனாகவே வாழ்ந்துவந்தான். “இராத்திரியில் எழுந்திருந்து, தன் இரண்டு மனைவிகளையும், தன் இரண்டு பணிவிடைக்காரிகளையும், தன்னுடைய பதினொரு குமாரரையும் கூட்டிக்கொண்டு, யாப்போக்கு என்கிற ஆற்றின் துறையைக் கடந்தான், அவர்களையும் சேர்த்து, ஆற்றைக் கடக்கப்பண்ணி, தனக்கு உண்டான யாவையும் அக்கரைப்படுத்தினான். யாக்கோபு பிந்தித் தனித்திருந்தான்”. தனக்கு உண்டான வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும், மந்தைகளையம், மனவைிகளையும் மற்றும் எல்லாவற்றையம் யாக்கோபு அக்கரைப்படுத்திவிட்டு பயந்து நடுக்கியவனாகவே இக்கரையிலே நிற்கின்றான். தன் சகோதரனாகிய ஏசா தனது பரிவாரங்கின் ஒரு பகுதியின்மேல் விழுந்து அவைகளை வாரிக்கொண்டுபோனாலும், மீதமுள்ள பகுதி இருக்குமே என்ற எண்ணமுடையவனாய் தனது மந்தையை இரண்டாகப் பிரித்து அனுப்புகின்றான். ஆனால், அவனது உள்ளத்தில் பயம் அதிகரித்தபோதோ, தனக்குண்டான எல்லாவற்றையும் இழக்க ஆயத்தமானவனாய், அனைத்தையும் அக்கரைப்படுத்திவிட்டு தனியொருவனாய் பயந்து இக்கரையிலே நின்றுவிட்டான்.

ஆனால், ஆற்றின் இக்கரையில் யாக்கோபு தேவனைச் சந்தித்தபோது அவனுக்குள் பெரும் மாற்றம் உண்டாயிற்று. எதிர்ப்புகளைச் சந்திப்பதற்கு யாக்கோபு ஆயத்தமாகிவிட்டான். பிந்தி தனித்திருந்த யாக்கோபு இப்போதோ, எல்லா

பரிவாரங்களுக்கும் முன்னதாக நடந்து செல்கின்றான். இரண்டு தொடைகளால் நன்றாக நடக்கும்போது இல்லாத பெலம் சுளுக்கிய தொடையின் மூலம் வந்துவிட்டது. நான் இனி தனியனாக அல்ல என்னுடன் தேவன் இருக்கிறார் என்ற பெலத்தில், தனது அண்ணன் நாநூறு பேருடன் வருகிறான் என்று கேள்விப்பட்டபோதிலும், அவனைச் சந்திப்பதற்கும் எதிர்கொள்வதற்கும் ஆயத்தமாகிவிட்டான். தேவனை நாம் சந்தித்திருப்போமென்றால், அவருடன் நெருங்கிய உறவு கொண்டவர்களாய் வாழ்ந்துவருவோமென்றால், நாம் எதிர்கொள்ளும் தருணங்களிலோ அல்லது சந்தர்ப்பங்களிலோ நாம் பயந்து நடுங்குகிறவர்காகக் காணப்படமாட்டோம்; ஏனெனில் நம்முடன் தேவனுண்டே. சவுலும் அவனது படைகளும் பெலிஸ்தியனாகிய கோலியாத்திற்கு முன் நடுங்கிக்கொண்டிருந்தபோது, தனது சகோதரர்களுக்கு பலகாரங்களைக் கொடுக்க வந்த தாவீது, யுத்தத்திற்கு வரவில்லை. ஆனால், கோலியாத்தின் கர்ஜனையைக் கேட்டபோதோ, தாவீது யுத்தத்திற்கு ஆயத்தமாகிவிட்டான். *"நீ இளைஞன், உனக்கு பழக்கமில்லை"* என்ற எதிர்மறையான மற்றோரின் வார்த்தைகள் தாவீதைப் பின்னடையச் செய்யவில்லை; மாறாக, தேவன் என்னுடன் இருக்கிறார் என்ற பெலம் அவனை கோலியாத்தை எதிர்கொள்ள ஆயத்தமாக்கிற்று. **தேவனோடு வாழும் மனிதன் ஒருபோதும் பயப்படுவதில்லை. தேவனுக்குப் பயப்படுகிற மனிதன் மனிதனுக்குப் பயப்படுவதுமில்லை.**

> **தேவனோடு வாழும் மனிதன் ஒருபோதும் பயப்படுவதில்லை. தேவனுக்குப் பயப்படுகிற மனிதன் மனிதனுக்குப் பயப்படுவதுமில்லை.**

யாக்கோபுக்குத் துணிச்சலும், தைரியமும் வந்திருந்தது; ஆனாலும், யாக்போபு ஒன்றை மறந்துவிட்டான். தேவனை அவன் சந்தித்திருந்தான், அவரோடு உறவுகொண்டிருந்தான், ஆனால், அதை தன் ஜனங்களுக்கும், மனைவிக்கும், குடும்பத்தினருக்கும், மற்றவர்களுக்கும் சொல்லிக்கொடுக்க மறந்துவிட்டான். 'தேவனைக் கண்டேன்' என்று அவர்களுக்குச் சொன்னான்; ஆனால், அவர் பரிசுத்தர் என்பதை காட்டிக்கொடுக்க மறந்துவிட்டான். இந்நிலையில், யாக்கோபின் வாழ்க்கையில் புயல் வீசத்தொடங்கியது. மகளாகிய தீனாள் தேசத்தைச் சுற்றிப்பார்க்கச் சென்றபோது, அத்தேசத்து பிரபுவின் மகனால் அவள் கெடுக்கப்பட்டாள். தீனாளின் அழகும், அலங்காரமும், அடங்காமையுமே அதற்குக் காரணங்களாயமைந்தன. பெற்றோர் மற்றும் சகோதரர்களின் பாதுகாப்பு என்னும் வளையத்தைத் தாண்டும் பல வாலிப சகோதரிகளின் நிலை இதுவே. பதினோரு சகோதரர்களுக்குத் தங்கையாகத் தீனாள் பிறந்திருந்தும், அவளோ, சுதந்திரமாகத் தனியாக தனது மனவிருப்பத்தின்படி நடக்கிறவளாகவே காணப்பட்டதினாலேயே, அவளது வாழ்வில் இத்தகைய விபரீதம் நிகழ்ந்தது. வாலிப சகோதரிகள் கொடிகள்தானே தவிற அவர்கள் மரமல்ல. சகோதரிகளின் சுதந்திரத்திற்கு ஓர் எல்லை உண்டு. ஆனால், தீனாள் இதனைப் புரிந்துகொள்ளாததினால் விபத்திற்குள்ளானாள்; தேசத்தைச் சுற்றிப்பார்க்க அவள் பாதுகாப்பில்லாமல் சென்றதினால், அத்தேசத்தின் பரிசுத்த குலைச்சல் தீனாளைப் பரிசுத்தக் குலைச்சலுக்குள் தள்ளிற்று. சிமியோனும், லேவியும் தனது பட்டயங்களை எடுத்து சகோதரியைத் தீட்டுப்படித்தியவனின் ஊராரை வெட்டினார்கள்; தீனாளின் செயல் அவள் சகோதரர்களையும் கொலைகாரர்களாக மாற்றியது.

> **சூழ்நிலைகளைப் பொருத்தல்லதேவனிட த்தில் நாம் திரும்புவதைப் பொருத்தே எழுப்புதல் ஆரம்பமாகும்.**

யாக்கோபு இதைக் கண்டபோதோ புலம்புகின்றான், தேசத்தில் என் வாசனையைக் கெடுத்துவிட்டீர்களே என்று அங்கலாய்க்கின்றான். ஆனால், அவனது கூப்பிடுதல் ஆண்டவரை நோக்கித் திரும்பவில்லை. ஆண்டவரைத் தரிசித்ததினால்தானே, அவர் ஆசீர்வதித்ததினால்தானே நான் தைரியத்துடன் முன்னேறி வந்தேன்; ஆனால், இப்போது எனது குடும்பத்திற்கு ஏன் இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டுவிட்டது என்பதை யாக்கோபு உள்ளத்தில் உணர்ந்தபோது அவன் ஏல்பெத்தேலுக்கு கடந்துவருகின்றான். தேவன் எனது

வீட்டின் முன்னும் பின்னும் இல்லாவிட்டால் பாதுகாப்பு இல்லை என்பதை அவன் உணர்ந்தபோதுதான், அவன் ஏல்-பெத்-ஏல் க்கு வருகின்றான். 'ஏல்பெத்தேல்' என்பதற்கு தேவன் என்னை முன்னும் பின்னும் காவல் செய்பவர் என்று அர்த்தம். தேவனுக்கு முதலிடம் கொடுப்பது எனக்கு மாத்திரமல்ல, எனது குடும்பத்திற்கும் தேவை என்பதை அவன் உணர்ந்துகொண்ட ஸ்தலத்தின் பெயரே ஏல்பெத்தேல். சூழ்நிலைகளினால் கலங்கிய நிலையலிருந்த யாக்கோபையும் தேவன் உயிர்ப்பிக்கின்றார்.

நாம் சோர்ந்து போகும் நேரத்திலும், கலங்கி நிற்கும் வேளையிலும் நம்மை உயிர்ப்பிக்கிறதற்கும், பாதுகாப்பதற்கும் நம்மை அழைத்த தேவன் போதுமானவர். **சூழ்நிலைகளைப் பொருத்தல்லதேவனிடத்தில் நாம் திரும்புவதைப் பொருத்தே எழுப்புதல் ஆரம்பமாகும்.** நாம் தேவனை முகமுமாய் தரிசிப்பது மாத்திரமல்ல, நமது தேசத்தின் மாந்தரனைவரும் தேவனைக் காணவேண்டும் என்ற வாஞ்சையே எழுப்புதலின் ஆரம்ப வித்து.

பரிசுத்தத்தினால் பரவும் எழுப்புதல்

> தேவன் யாக்கோபை நோக்கி: நீ எழுந்து பெத்தேலுக்குப் போய், அங்கே குடியிருந்து, நீ உன் சகோதரனாகிய ஏசாவின் முகத்திற்கு விலகி ஓடிப்போகிறபோது, உனக்குத் தரிசனமான தேவனுக்கு அங்கே ஒரு பலிபீடத்தை உண்டாக்கு என்றார். அப்பொழுது யாக்கோபு தன் வீட்டாரையும் தன்னோடேகூட இருந்த மற்ற அனைவரையும் நோக்கி: உங்களிடத்தில் இருக்கிற அந்நிய தெய்வங்களை விலக்கிப்போட்டு, உங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டு, உங்கள் வஸ்திரங்களை மாற்றுங்கள். நாம் எழுந்து பெத்தேலுக்குப் போவோம் வாருங்கள். எனக்கு ஆபத்து நேரிட்ட நாளில் என் விண்ணப்பத்துக்கு உத்தரவு அருளிச்செய்து, நான் நடந்த வழியிலே என்னோடேகூட இருந்த தேவனுக்கு அங்கே ஒரு பலிபீடத்தை உண்டாக்குவேன் என்றான். ஆதி 35:1-3

நாம் மாத்திரம் தேவனைத் தரிசித்தால் போதாது, நமது குடும்பத்தினரும், தேசத்தாரும் தேவனைத் தரிசிக்கவேண்டும் என்று வாஞ்சை நமது உள்ளத்தில் ஊற்றெடுக்கவேண்டும். யாக்கோபை மாத்திரமே தேவன் பெத்தேலுக்கு அழைத்தார், ஆனால் யாக்கோபோ, தனது குடும்பத்தினர் மற்றும் அனைவரோடும் பெத்தேலுக்குச் செல்ல ஆயத்தமாகின்றான். நமக்குள் எழும்பும் எழுப்புதல், நமது குடும்பம், கிராமம், பட்டணம், சபை, தேசங்களைப் பற்றிப்பிடிக்கவேண்டும். நாம் பெற்ற அழைப்பினை மற்றவர்களுக்கும் கடத்தவேண்டிய பொறுப்பு நமக்கு உண்டு. யாக்கோபை தேவன் பெத்தேலுக்கு அழைத்தபோது, அவ்வழைப்புடன் மேலும் சில காரியங்களையும் கூடவே யாக்கோபு புரிந்துகொண்டான். *'பரிசுத்தமில்லாமல் ஒருவனும் தேவனைத் தரிசிக்கமுடியாது'*. ராகேல் கொண்டுவந்த தெய்வத்திற்கு நடைபெற்ற பூஜைகளை அவன் அறிந்திருந்தும் அதனைக் கண்டுகொள்ளாதவனாகவே இதுவரை இருந்துவந்தான். ராகேலை நேசித்தபடியினாலேயே, யாக்கோபு அப்படிச் செய்தான். அவளைக் கண்டிக்கிறதற்குக் கூட யாக்கோபிற்குத் தைரியமில்லாதிருந்தது. ஆனால், தேவனைச் சந்தித்த பின்போ, *"உங்களிடத்தில் இருக்கிற அந்நிய தெய்வங்களை விலக்கிப்போட்டு, உங்களைச் சுத்தம்பண்ணிக்கொள்ளுங்கள்"* என்று அறைகூவல் விடுக்கின்றான்; இருப்பினும், ராகேலினிடம் நேரடியாக அவன் சொல்லவில்லை, அப்படிச் சொல்லவும் தைரியமற்றவனாயிருந்தான். தேவனது

> ஆடைகள் அவசியமானதுதான்; ஆனால், பரிசுத்தமில்லாத, காண்போரை இச்சைக்குள் ஈர்க்கின்ற, நேர்மையற்ற உடைகள் தேவனுக்குப் பிரியமாயிருப்பது எப்படி? நமது ஆடைகள் எதிரிகளை ஈர்க்குமென்றால் பாதுகாப்பு என்பது கேள்விக்குரியாகிவிடும்!

சந்திப்பு நமக்கு தைரியத்தைக் கொடுத்திருந்தாலும், பரிசுத்தமில்லாமல் நமது வாழ்வினைத் தொருவோமென்றால், எதிர்ப்புகளைச் சந்திக்கும்போது, தைரியம் பறந்தோடிவிடும். ***நம்முடைய பரிசுத்தமே எழுப்புதலுக்குக் காரணம்.*** பரிசுத்தமில்லைாதவர்களாய் இருப்போமெனில், நம்மூலமாய் இத்தேசத்தில் எழுப்புதல் தீ பற்றிப்பிடிப்பது என்பது இயலாதது. குடும்பத்திலும், தேசத்திலும் எழுப்புதலைக் காண நாம் ஏக்கமுடையோராயிருப்போமெனில், நமது தனி வாழ்வின் பரிசுத்தத்தை ஆராய்ந்து பார்ப்பது அவசியமானது. **பரிசுத்தத்தின் அலங்காரமே எழுப்புதலுக்கு நாம் தரிக்கவேண்டிய வஸ்திரம்.**

தன்னுடன் இருப்போரைப் ***'பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள்'*** என்று யாக்கோபு சொன்னதோடு மாத்திரமல்லாமல், ***'வஸ்திரங்களையும் மாற்றிக்கொள்ளுங்கள்'*** என எச்சரிப்பு விடுக்கின்றான். தேவனிடத்தில் செல்லும் நாம் நமது ஆடைகளிலும் கூட பரிசுத்தமுள்ளவர்களாய்க் காணப்படவேண்டும். நாம் அணியும் ஆடைகள் கூட தேவன் விரும்பும் வண்ணம் அமையவேண்டும். அருவருப்புகள் நமது வாழ்வில் காணப்படுமென்றால் உடனே அவைகளை நாம் அகற்றிவிடவேண்டும். ஆடைகள் அவசியமானதுதான்; ஆனால், பரிசுத்தமில்லாத, காண்போரை இச்சைக்குள் ஈர்க்கின்ற, நேர்மையற்ற உடைகள் தேவனுக்குப் பிரியமாயிருப்பது எப்படி? நமது ஆடைகள் எதிரிகளை ஈர்க்குமென்றால் பாதுகாப்பு என்பது கேள்விக்குரியாகிவிடும்.

எழுப்புதலின் தீ நம் வழியாக இத்தேசத்தையும், சார்ந்தோரையும் பற்றிப்பிடிக்கவேண்டுமென்றால், நம்மோடு ஓட்டிவரும் அருவருப்புகளுக்கு நாம் முதலில் விடைகொடுக்கவேண்டும். பலவிதமான தேவனுக்கு விரோதமான அருவருப்புகளை நாம் வேதத்தில் காணமுடியும் "வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது. (நீதி 28:9). ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார், ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள். அவையாவன: மேட்டிமையான கண், பொய்நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங் கை, துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங் கால், அபத்தம்பேசும் பொய்ச்சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல் ஆகிய இவைகளே. (நீதி 6:16-19)." "அவர் அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷர்முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள், தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார், மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது. (லூக் 16:15)."

மேற்கண்ட வசனங்களில் எழுதப்பட்டுள்ள அருவருப்புகள் நமது வாழ்வில் நம்முடன் தொடர்ந்து பயணிக்குமென்றால், எழுப்புதல் தீயை அவைகள் அணையச்செய்துவிடுமே. தேசம் எழுப்புதலடைய நமது அருவருப்புகள் அடக்கம்பண்ணப்படவேண்டும். தேவன் அருவருக்கும் காரியங்கள் நம்முடைய வாழ்வில், குடும்பத்தில் உண்டோ என்று சோதித்துப் பார்த்து, நாம் ஏல்பெத்தேலுக்கு வருவோமென்றால் மாத்திரமே நாம் எழுப்புதலுக்குக் காரணமானோராக மாற இயலும்.

இழப்பிலும் நிலைக்கும் எழுப்புதல்

> அங்கே அவன் ஒரு பலிபீடத்தைக் கட்டி, தன் சகோதரனுடைய முகத்துக்குத் தப்பி ஓடினபோது, அங்கே தனக்கு தேவன் தரிசனமானபடியால், அந்த ஸ்தலத்திற்கு ஏல்பெத்தேல் என்று பேரிட்டான். ரெபெக்காளின் தாதியாகிய தெபொராள் மரித்து, பெத்தேலுக்குச் சமீபமாயிருந்த ஒரு கர்வாலி மரத்தின்கீழ் அடக்கம்பண்ணப்பட்டாள். அதற்கு அல்லோன்பாகூத் என்னும் பேர் உண்டாயிற்று. ஆதி 35:7,8

> பின்பு பெத்தேலை விட்டுப் பிரயாணம் பறப்பட்டார்கள். எப்பிராத்தாவுக்கு வர இன்னும் கொஞ்சம் தூரமிருக்கும்போது, ராகேல் பிள்ளைபெற்றாள். பிரசவத்தில் அவளுக்கு கடும்வேதனை உண்டாயிற்று. பிரசவிக்கும்போது, அவளுக்குக் கடும்வேதனையாயிருக்கையில், மருத்துவச்சி அவளைப் பார்த்து, பயப்படாதே, இந்த முறையும் புத்திரனைப் பெறுவாய் என்றாள். மரணகாலத்தில் அவள் ஆத்துமா பிரியும்போது, அவள் அவனுக்கு பெனொனி என்று பேரிட்டாள். அவன் தகப்பனோ, அவனுக்கு பென்யமீன் என்று பேரிட்டான். ராகேல் மரித்து, பெத்லகேம் என்னும் எப்பிராத்தா ஊருக்குப் போகிற வழியிலே அடக்கம்பண்ணப்பட்டாள். ஆதி 35:16-19

ஏல்பெத்தேலுக்கு யாக்கோபு சென்றபோது, ராகேலின் தாதியாகிய தெபோராளின் மரணம் ஏற்பட்டது. தெபோராள் அவனுக்கு ஆறுதல் அளிப்பவளாக இருந்திருக்கலாம், குடும்ப வாழ்வின் பல படிகளில் அவனுக்கு உதவியவளாக இருந்திருக்கலாம்; ஆனாலும், எழுப்புதல் அவனுக்குள் வந்தபடியினால் அவளது மரணம் அவனைப் பாதிக்கவில்லை. ராகேல் மரிக்கும்போது, கஷ்டத்தில் பிறந்த தனது புத்திரனுக்கு 'பெனானி' என்று பெயரிடுகின்றாள். ஆனால், தொடர்ச்சியாக மரணத்தை சந்தித்த யாக்கோபோ, ஏல்பெத்தேலில் தேவனைத் தரிசித்திருக்கிறபடியினாலே அவனுக்கு 'பென்யமீன்' என்று பெயரிட்டான்; அதற்கு எனது வலதுபக்க புயத்தின் குமாரன் என்பது அர்த்தம். இத்தகைய தைரியமிக்க வாழ்க்கைக்கு வித்திட்டது எழுப்புதலே, அத்துடன் எழுப்புதலே யாக்போபை முற்றிலும் மாற்றியமைத்தது. உண்மையான எழுப்புதல் ஒரு மனிதனை, குடும்பத்தை, சபையை, நாட்டை சந்தித்திருக்குமானால் எந்த ஒரு இழப்பும் அதை பாதிக்கமுடியாது.

உலகைக் கலக்கும் எழுப்புதல்

> பின்பு பிரயாணம் புறப்பட்டார்கள். அவர்களைச் சுற்றிலும் இருந்த பட்டணத்தாருக்குத் தேவனாலே பயங்கரம் உண்டானதினால், அவர்கள் யாக்கோபின் குமாரரைப் பின்தொடராதிருந்தார்கள். ஆதி 35:5

எழுப்புதலுக்கு நம்மை அாப்பணிக்கும்போது, நம்மைச் சுற்றியிருக்கும் மக்கள் மத்தியில் நம்மைப் பற்றிய பயத்தை தேவன் உண்டாக்குவார் என்பதை நாம் அறிந்துகொள்வது அவசியமானதொன்று. நாம் சத்துருக்களைக் கண்டு பயப்படமாட்டோம்; மாறாக சத்துருக்கள் நம்மைக் கண்டு பயப்படும் நிலை உண்டாகும். உலகத்தைக் கலக்குகிறவர்கள் வந்துவிட்டார்களே என்று சத்துருக்கள் நம்மைக் கண்டு நடுங்கும் நிலைக்குள் சபை பிரவேசிக்கவேண்டும். பாதாளத்தின் வாசல்களை மேற்கொள்ளும் வீரு நடையுடன் சபைகள் புறப்படவேண்டும். சத்துரு வெள்ளம்போல் வருவதற்கான எல்லா காரியங்களும் நமது தேசத்தில் நடைபெற்றுவருகின்றன. எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் நமது தேவன் நமக்காகக் கொடியேற்றுகிறவர்.

ஒரு இந்துக் குடும்பத்தைச் சார்ந்த வாலிப சகோதரி தன்னை சந்தித்த தேவனுக்காக தனது வாழ்க்கையை ஒப்புக்கொடுத்ததுடன், மிஷனெரியாகவும் தன்னை அர்ப்பணித்தபோது; அவளது தகப்பனாரோ 'நான் அழிக்கத்தேடும் தெய்வத்தை நீ அறிவிக்கப்பபோகிறாயா' என்று ஆதங்கப்பட்டார். என்றாலும், அந்த சகோதரி மிஷனெரியாக அர்ப்பணிக்கப்பட்டபோது, அவளது தந்தையே முதல் நபராக அவ்வாராதனையில் கலந்துகொண்டார். நமது தேவன் எதிர்ப்புகளை சந்திக்கவும், எதிர்ப்போரை கலங்கடிக்கவும் வல்லமையுடையவர். **நம்மைக் கண்டு சத்துரு பயப்படும்படியான பெரிய காரியத்தை நமக்குள் கொழுந்துவிட்டெரியும் எழுப்புதல் செய்துவிடும்.** தேசத்தின் எழுப்புதலுக்குக் காரணமான, தடையான காரியங்கள் நம்முடைய வாழ்வில் காணப்படுமென்றால், நாம் அவைகளை கழைந்தெறிய ஆயத்தமாகவேண்டும். அப்படிச் செய்வோமென்றால், நம்முடைய எதிராளிகளின் மத்தியில் நம்மைக் குறித்த, நமது பரிசுத்த தேவனைக்குறித்த பயம் உண்டாகும்.

யாக்கோபு சென்ற பிரயாணம் பரிசுத்தத்தின் பயணமாக மாறிவிட்டது. தேவனை நமக்கு முன்னும், பின்னும் வைத்து நாம் பயணித்தால், நம்மைக்குறித்த அச்சம் எதிராளிகளின் நெஞ்சில் நிச்சயம் உண்டாகும். எழுப்புதல் நம்மில் வந்துவிட்டால், மனைவியின் மரணமோ, தாதியின் மரணமோ அல்லது தகப்பனின் மரணமோ நம்மை தடுத்து நிறுத்தமுடியாது. யோவாஸ் ராஜாவின் காலத்தில் எழுப்புதல் வந்தது, எசேக்கியேல் காலத்தில் எழுப்புதல் வந்தது, ஆசாவின் காலத்திலும் எழுப்புதல் வந்தது. இந்த எழுப்புதல்களிலெல்லாம் அருவருப்புகள் அகற்றப்பட்டன. எசேக்கியா ராஜாவின் காலத்தில் மோசே செய்து வைத்திருந்த வெண்கலச் சர்ப்பத்திற்கு ஜனங்கள் தூபங்காட்டிவந்தார்கள், அந்த சர்ப்பத்தைக் கண்டுதான் ஜனங்கள் வனாந்தரத்தில் உயிர் பிழைத்தார்கள், ஆனால் மோசே விட்டுவிட்டுச் சென்ற அந்த சர்ப்பத்திற்கும் ஜனங்கள் தூபங்காட்டத் தொடங்கியபோதோ, அது தேவனால் சகிக்கக்கூடாத அருவருப்பாக உருவெடுத்தது. 'நிகுஸ்தான்' என்ற வெண்கலச் சர்ப்பம் எழுப்புதலின் தடைக்கு மூல காரணம் என்பதை அவன் அறிந்தபோது, அதை நொறுக்கிவிட்டான்.

வேதத்தில் எழுப்புதல் உண்டான இடங்களிலெல்லாம் அருவருப்புகள் அகற்றப்பட்டன. அருவருப்புகள் அகற்றப்படும்போது மாத்திரமே தேவ அக்கினி இறங்கும், தேவ அக்கினி இறங்கினால் தேவ ஜனங்களாகிய நாம் இவ்வுலகில் தேவனுக்காக ஜொலிக்கத் தொடங்குவோம். நாம் வாழும் தேசம் தேவனை அறிந்துகொள்ளும். நாம் தேசத்திற்கு ஒளிதரும் விளக்காக மாறவேண்டுமென்று தேவன் நம்மேல் தனது அக்கினியை இறங்கப்பண்ண விரும்புகிறார். நாம் நம்மிடத்தில் காணப்படும் அருவருப்புகளை அகற்றும்போது, பரிசுத்தத்திற்குப் பிரதான இடம் கொடுக்கும்போது நாம் தேசத்தில் எழுப்புதலைக் காணமுடியும். **கிட்டும் தொலைவிலுள்ள எழுப்புதல் எட்டாக் கனியல்ல; அழைப்புடன் அர்ப்பணித்தோருக்கு அது கடினமான பணியல்ல.**